# ‘‘டிவிஎஸ் சப்ளை செயின் சொல்யூஷன்’’ நிறுவனத் தலைவராக ஆர். தினேஷ் பதவி ஏற்றார்

## புதிய இயக்குனர்கள்: கே.ஆனந்த் கிருஷ்ணன், நாராயணன் கே. சேஷாத்திரி

**சென்னை ஆக 31–**

**பல்வேறு தொழிற்சாலை, நிறுவனங்களுக்கு அவர்களின் பொருட்களை உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் விநியோகம் செய்யும் சிறப்பு வசதி கொண்ட டிவிஎஸ் சப்ளை செயின் சொல்யூஷன் நிறுவனத்தின் தலைவராக இதன் நிறுவனர் ஆர். தினேஷ் பதவியேற்றார். இத்துடன் இந்த துறையில் பிரபலமான கே. ஆனந்த் கிருஷ்ணன் மற்றும் நாராயணன் கே. சேஷாத்திரி ஆகியோர் கூடுதல் இயக்குனர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.**

இந்நிறுவனத்தில் தற்போது மொத்தமாக 5 இயக்குனர்கள் உள்ளனர். தருண் கண்ணா, பி.ஸ்ரீராம், கவுரி குமார் ஆகியோருடன் எக்ஸிக்யூட்டிவ் அல்லாத டைரக்டர் எஸ். ரவிச்சந்திரன் ஆகியோரும் இதன் நிர்வாகத்தில் உள்ளனர்.

இந்நிறுவனத்தின் எக்ஸிக்யூட்டிவ் தலைவர் ஆர். தினேஷ் பேசுகையில், இதுவரை தலைவராக இருந்த எஸ். மகாலிங்கத்திடமிருந்து பொறுப்புகளை ஏற்று எக்ஸிக்யூட்டிவ் சேர்மனாக நான் பதவி வகிக்கிறேன். இந்த நிறுவனம் வாடிக்கையாளர் நலன், உற்பத்தி திறன் அதிகரிப்பு, பல்வேறு நாடுகளின் பொருட்கள் விநியோகம் போன்ற சிறப்பு அம்சங்களை கொண்ட இந்த நிறுவனம் தொடர்ந்து மேலும் மேலும் வளரும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

எங்களது வளர்ச்சி திட்டத்தில் இதன் புதிய இயக்குனர்கள் ஆனந்த் கே. கிருஷ்ணன், நாராயணன் கே. சேஷாத்திரி ஆகியோருடைய ஒத்துழைப்பும் தொடர்ந்து வணிகம் சிறப்பாக செயல்பட உறுதுணையாக இருக்கும். இதன் மூலம் உலக அளவில் பிரம்மாண்ட சப்ளை செயின் நிறுவனமாக உருமாற உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

### டிவிஎஸ் மொபிலிட்டி குருப் அங்கம்

இந்த நிறுவனம் டிவிஎஸ் மொபிலிட்டி மற்றும் டி.எஸ் ராஜம்



ரப்பர், தின்ராமா மொபிலிட்டி சொல்யூஷன், ராமச்சந்திரன் தினேஷ் ஆகியோரின் நிர்வாக வழிகாட்டுதலில் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இதன் பங்கு வெளியீட்டுக்கு பிறகு கடந்த 23ஆம் தேதி பங்கு மார்க்கெட்களில் இதன் பங்கு விலை குறிப்பிடப்பட துவங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிறுவனம் டிவிஎஸ் மொபிலிட்டி குரூப் அங்கமாக திகழ்கிறது. பாரம்பரிய டிவிஎஸ் குரூப் அங்கமாக இருந்த இந்த நிறுவனம் தற்போது டிவிஎஸ் மொபிலிட்டி குரூப் அங்கமாக உள்ளது.

டிவிஎஸ் சப்ளை செயின் சொல்யூஷன்ஸ் நிறுவனம் இந்திய நிறுவனமானாலும் சர்வதேச நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. கடந்த 15 ஆண்டுகளாக இந்தியாவில் உள்ள பல்வேறு தொழிற்சாலை நிறுவனங்களுக்கு இந்திய அளவில் சரக்கு போக்குவரத்து மற்றும் சர்வதேச மார்க்கெட்டில் இந்திய நிறுவனங்களின் தயாரிப்பு பொருட்களை சப்ளை செய்ய வசதி செய்து கொடுக்கிறது. இந்த குரூப் சர்வதேச நிறுவனங்களுக்கும், அரசு துறைகளுக்கும் பெரிய – சிறு வர்த்தக நிறுவனங்களுக்கும் பல்வேறு துறைகளில் பல்வேறு பொருட்களை சப்ளை செய்ய உதவுகிறது. ஒருங்கிணைந்த சரக்கு கொண்டுச் செல்ல இந்த நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

### லாஜிஸ்டிக் சொலுஷன்

டிவிஎஸ் லாஜிஸ்டிக் சொலுஷன் நிறுவனம் ஒருங்கிணைந்த சரக்கு கையாளும் பணிகளை அனைத்து நிறுவனங்களுக்கும் வழங்கி வருகிறது. தொழிற்சாலைகளுக்குள் சரக்கு கையாளுதல், பொருட்கள் நிர்வாகம், பொருட்களை பேக்கிங் செய்தல், அனுப்புதல், சரக்கு போக்குவரத்துக்கு தொழில் நுட்பம் வழங்குதல், உப கருவிகள் நிர்வாகம் பல்வேறு நிர்வாக வசதிகள் ஏற்படுத்துதல், சரக்கு போக்குவரத்து, ராணுவ தளவாடங்கள் போக்குவரத்து, தொழில்துறை மற்றும் சரக்கு சேமிப்பு பூங்காக்கள், சேமிப்பு கிடங்குகள் ஒருங்கிணைந்த சப்ளை செயின் தீர்வுகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல் மற்றும் இதர நிறுவனங்களுக்கு உதவுதல் போன்ற பணிகளை சிறப்பாக செய்து வருகிறது.

### 100 நகரங்களை ஒருங்கிணைத்து

இந்த நிறுவனத்துக்கு 150 இடங்களில்சரக்கு கொண்டுச்செல்லும் சேமிப்பு மையங்கள் உள்ளன. 100 நகரங்களை ஒருங்கிணைத்து சரக்கு போக்குவரத்து ஏற்பாட்டுக்கும் இந்த நிறுவனம் வசதி செய்துள்ளது. இந்தியாவில் 19.5 மில்லியன் சதுர அடி சேமிப்பு கிடங்கு வசதிகளை கொண்டுள்ளது. பல்வேறு அவசர தேவைக்கு ஏற்றவாறு விரைவாக உதிரி பாகங்களை கொண்டுச் சென்று சேமித்து வைத்து சப்ளை செய்யும் வசதியை இந்நிறுவனம் ஏற்பாடு செய்கிறது.

பல்வேறு நிறுவனங்களுக்கு இது வழங்கிய பொருட்களின் உதிரி பாகங்கள் பழுதடைந்தால் ஒரே நாளில் திரும்பவும் அந்த கருவியை அனுப்பி சப்ளை செய்யும் வசதியை எந்நேரமும் தயார் நிலையில் செய்கிறது.

இந்நிறுவனம் ஜெய்ப்பூர், கொல்கத்தா, பாட்னா, தர்மபுரி, அகமதாபாத், கோவா, திருநெல்வேலி, சென்னை, கொச்சி, ஐதராபாத் போன்ற நகரங்களில் பல்வேறு நிறுவனங்களின் உதிரி பாகங்களை சேமித்து தயார் நிலையில் அனுப்ப வசதியை கொண்டுள்ள மையங்களை நிறுவியுள்ளது.

இந்நிறுவனத்தின் பங்கு வெளியீடு பற்றி *www.tvscs.com* வலைத்தளத்தில் பார்க்கலாம்.

# வடசென்னை அகஸ்தியா திரையரங்கு வளாகத்தில் நிறுவப்படும் பிரமாண்ட சங்கர நேத்ராலயா மருத்துவமனை: டி.எம். கிருஷ்ணா இசை நிகழ்ச்சி மூலம் நிதி வசூல்

## செப்டம்பர் 2ந் தேதி மியூசிக் அகாடமியில் நிகழ்ச்சி

## தலைவர் டி.எஸ்.சுரேந்திரன் தகவல்

சென்னை, ஆக.31–

சென்னை சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனை கடந்த 45 வருடங்களாக தனது பன்னாட்டுத்தரத்திற்கு இணையான சேவைகளின் மூலம் பல கோடி நோயாளிகளின் பார்வையை மீட்டுக் கொடுத்து வந்துள்ளது.

வேகமாக வளர்ந்து வரும் சென்னை மாநகரத்தின் தேவைக்கேற்ப கண் மருத்துவ சேவையை விரிவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, அதிகம் கவனிக்கப்படாத பகுதியாக கருதப்படும் வடசென்னை வாழ் மக்கள் தேவைகளை கருத்தில் கொண்டு தண்டையார்பேட்டையில் வட சென்னையின் அடையாளமாக இருந்த பிரபல அகஸ்தியா திரையரங்கு வளாகத்தில் ஒரு புதிய கண் மருத்துவமனையை உருவாக்குகிறது என்று இதன் தலைவர் டி.எஸ். சுரேந்திரன் தெரிவித்தார்.

ஸ்ரீஅகஸ்தியா அறக்கட்டளையுடன் சங்கர நேத்ராலயாவும் இணைந்து அதன் 1.25 ஏக்கர் பரப்பளவில் 40 ஆயிரம் சதுர அடிகள் கொண்ட பன்னாட்டுத் தரத்தில் சங்கர நேத்ராலயாவின் விரிவாக்க வளாகமாக உருவாக்குகிறது.

இந்த மருத்துவமனையில் கும்மிடிப்பூண்டி உள்ளிட்ட புறநகர்ப்பகுதி வாழ் மக்களின் சிறப்பு கண் மருத்துவ சேவையை வழங்கும் விதத்தில் கண்புரை, கார்னியா,




க்ளகோமா, நரம்பியல் கண் மருத்துவ பிரிவு, யூவியா, கண் சார்ந்த பிளாஸ்டிக் துறைகள் உள்ளிட்ட சிறப்பு மையமாக ரூ. 50 கோடி மதிப்பில் உருவாகிறது என்றார் அவர்.

இந்த புதிய வளாகம் புதிய எண். 231 & 232, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை, சென்னை–600 081 முகவரியில் அனைத்து தரப்பு மக்களின் தேவைகளையும், வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் உருவாகிறது.

வடசென்னை மற்றும் வடசென்னை புறநகர்ப்பகுதி வாழ் மக்களின் விழிகளுக்கு ஒளியேற்றும் இந்த திட்டத்திற்கு நிதி திரட்டும் விதமாக பிரபல கர்நாடக இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணா, சென்னை மியூசிக் அகாடமியில் செப்டம்பர் 2ஆம் தேதி (சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் இசை நிகழ்ச்சி வழங்குகிறார். உடன் அக்ஷய் அனந்த பத்மநாபன் (மிருதங்கம்), ஆர். கே. ஸ்ரீராம்குமார் (வயலின்) சந்திரசேகர சர்மா (கடம்) ஆகியோர் பக்க வாத்தியம் வாசிக்கிறார்கள்.

டி.எம். கிருஷ்ணா, பார்வையாளர்களின் விருப்பத்திற்காகப் பாடுவார். அவரது இசை பெரும்பாலும் ஆத்மார்த்தமானதாகவும் ராக பாவங்கள் நிறைந்ததாகவும் இருக்கும். என்று சங்கர நேத்ராலயாவின் தலைவர் மற்றும் குழந்தை கண் மருத்துவத் துறையின் இயக்குநர் டாக்டர் டி. எஸ். சுரேந்திரன், சங்கர நேத்ராலயா யுஎஸ்ஏ அறங்காவலர் ஜெ. சௌமியா நாராயணன் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி அறக்கட்டளை தலைவர் டாக்டர் கிரிஷ்ஷிவாராவ் ஆகியோர் தெரிவித்தனர்.

மேலும் விவரங்களுக்கு கவிதாவை 9941278018 ‘செல்’ போனிலோ அல்லது ஸ்ரீசத்யா சாயீஸ்வரியை 9791083755 ‘செல்’ போனிலோ தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு வலைத்தளத்தில் *www.sankaranethralaya.org* பார்க்கலாம்.

## மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப்பில் 3ந் தேதி

# முழுக்க முழுக்க சிறுவர்களே நடிக்கும் ‘நந்தனார்’ நாடகம்

சென்னை, ஆக.31–

செப்டம்பர் 3ந் தேதி மாலை 630 மணிக்கு மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப்பில் ‘நந்தனார்’ நாடகம் நடைபெறுகிறது.

சிறப்பு பயிற்சி பெற்ற 'சிறுவர் சிறுமிகள் மட்டுமே' நடிக்கும் பக்தி மேடை நாடகம் இது.

கிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு, "கிருஷ்ண கலா மந்திரம்" தயாரிப்பில், திருநாளைப்போவார் என்ற 63 நாயன்மார்களில் ஒருவரான, நந்தனாரின் சரிதம் மேடை ஏற்றப்படுகிறது. நந்தனராக – த விஜேஷ்!பல்வேறுகதாபாத்திரங்களில், தன் இயல்பான நடிப்பால், பல விருதுகளை பெற்ற, அனுபவம் மிக்க, மூத்த நாடக – திரைப்பட நடிகை மற்றும் இசை ஆசிரியை கீதா நாராயணன் (கலைமாமணி காத்தாடி ராமமூர்த்தி குழு) ஆழ்ந்து ஆராய்ந்து நாடக வடிவில் தத்ரூபமாக இயக்கி வழங்கவிருக்கிறார்.



‘நந்தனார்’ என்றால் பாடல் இல்லாமலா? ஊனை உருக்கும் பாடல் வரிகளுக்கும், நாடகத்திற்கும் இசை அமைத்தவர் கிரிதரன்.


# சந்திரபிரபு ஜெயின் கல்லூரி 21வது பட்டமளிப்பு விழா

சென்னை, ஆக. 31–

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் சந்திரபிரபு ஜெயின் கல்லூரியின் 21வது பட்டமளிப்பு விழா, பகவான் மகாவீர் கலையரங்கில் கடவுள் வாழ்த்து மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. விழாவை கல்லூரி செயலாளர் லலித்குமார் ஓ ஜெயின் தொடங்கி வைத்து வரவேற்புரையாற்றினார்.

கல்லூரி பொறுப்பு முதல்வர் நா.சுஜாதா 2022–2023 கல்வியாண்டிற்கான ஆண்டறிக்கையை வாசித்தார். அப்போர் அவர் உரையாற்றுகையில், மாணவர்கள் கடின உழைப்பின் மூலம் சாதனையாளர்களாக உயரலாம். அதற்கு மொழில் ஒரு தடையே இல்லை என வலியுறுத்தினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக தென்னிந்திய செலவு மற்றும் பணி கணக்காளர்கள் நிறுவனத்தின் தலைவர் சிஎம்ஏ. திவ்யா அபிஷேக்




கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி விழா பேரூரையாற்றினார்.

இவ்விழாவில் கல்லூரி நிர்வாகத்தினர் முன்னாள் தலைவர் காந்திலால் எச் சங்கி, தற்போதைய தலைவர் நேமிசந்த் கட்டாரியா, துணைத்தலைவர் சாந்திலால் எஸ் ஜெயின், இணைச் செயலாளர் சுரேஷ் ராத்தோட் மற்றும் குழு உறுப்பினர் ஜிதேந்தர் எஸ் மேஹ்தா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


**INDOWIND ENERGY LIMITED**
CIN: L40108TN1995PLC032311
REG OFFICE: KOTHARI BUILDING, 4TH FLOOR, 114, M.G. ROAD, NUNGAMBAKKAM, CHENNAI – 600 034. Ph : +91 44 28331956
Fax : +91 44 28330208 E-mail : contact@indowind.com

**NOTICE OF 28th ANNUAL GENERAL MEETING**

Notice is hereby given that 28th Annual General Meeting (AGM) of the Company will be held through Video Conferencing ("VC") / Other Audio Visual Means ("OAVM") in compliance with the applicable provisions of the Companies Act, 2013 and the Rules made thereunder and the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 read with General Circular issued by the Ministry of Corporate Affairs (MCA) dated 28th December 2022 (10/2022) and Circular dated 5th January 2023 (SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4) issued by the Securities and Exchange Board of India, which allowed companies to hold AGM through VC / OAVM without the physical presence of the Members at a common venue.

Accordingly, the Annual General Meeting (AGM) of the Company will be held on Monday, September 25th at 4:00 p.m. (through Video Conferencing ("VC") / Other Audio-Visual Means ("OAVM") provided by the Central Depository Services (India) Limited (CDSL) to transact the businesses as set out in the Notice of the 28th AGM dated 09/08/2023,The electronic copy of the Annual Report for the year 2022-2023 along with the notice of AGM will be made available on the website of the Company at https://indowind.co.in / and on the websites of the stock exchanges where the securities of the Company are listed i.e. www.nselndia.com and www.bselndia.com and also will be available on the website of CDSL at www.evotingindia.com Members can attend and participate in the AGM through VC/OAVM only, the details of which will be provided by the Company in the Notice of AGM.

Accordingly, please note that no provision has been made to attend and participate in the AGM of the Company in person. Members attending the meeting through VC/OAVM shall be counted for the purpose of reckoning the quorum under Section 103 of the Companies Act, 2013.

The Notice of the AGM and the Annual Report will be sent electronically to those members whose e-mail addresses are registered with the Company/Registrar & Transfer Agents (RTA) / Depository Participants(DPs). However, as per circular No. SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 dated 13.5.2022 issued by SEBI the Company shall send hard copy of full Annual Report to only those shareholders who request for the same.

Members who have not yet registered their email addresses are requested to register their email addresses with respective depository participant(s) in case of dematerialized shares and members holding shares in physical mode are requested to update their email addresses with Company's RTA M/s. Bigshare Services Pvt Ltd. No. Office No S6-2, 6th Floor, Pinnacle Business Park, Next to Ahura Centre, Mahakali Caves Road, Andheri (East) Mumbai – 400093. Email: bhagwan@bigshareonline.com

Members who have not updated their bank account details for receiving the dividends directly in their bank accounts through Electronic Clearing Service or any other means may follow the below instructions: in case of Physical Holding, submit the above said Form ISR-1 and other relevant documents with Registrar and Transfer Agent of the Company at their address as mentioned above. Members holding shares in demat form are requested to update their bank account details with their respective Depository Participants.

The Company is pleased to provide remote e-voting facility of CDSL to all its members to cast their votes on all resolutions set out in the Notice of the AGM. Additionally, the Company shall also provide the facility of voting through remote e-voting system during the Meeting. Detailed procedures for remote e-voting before/during the AGM will be available in the Notice of the AGM.

In case of any query, the members of the Company may contact the Company / RTA (bhagwan@bigshareonline.com Phone: 022-40430200).

By order of the Board
For **INDOWIND ENERGY LIMITED**
**RACHANA HINGAR**
Company Secretary, ACS No. 20863

Date : 30-08-2023
Place : Chennai



**GEM SPINNERS INDIA LIMITED**
CIN: L17111TN1990PLC019791
Regd. Office : No.14, Mangalam Village, Madhuranthagam Taluk, Kancheepuram District, Tamilnadu 603 107.
Email : accounts@gemspin.com
Website: www. gemspin.com

NOTICE is hereby given that:

1. The 33rd Annual General Meeting [AGM] of the Company is scheduled to be held on Thursday, 21st September 2023 at 10.30 a.m. at No.14, Mangalam Village, Madhuranthagam Taluk, Kancheepuram District, Tamil Nadu to transact the business as detailed in the Notice convening the Annual General Meeting.

2. The Register of Members of the Company and the Share Transfer Books of the Company will be closed from Friday, 15th September 2023 to Thursday, 21st September 2023 (both days inclusive) for the purpose of Annual General Meeting, in terms of Section 91 of Companies Act, 2013 read with Rule 10 of the Companies (Management & Administration) Rules,2014.

3.The Company is pleased to provide all its members the facility to exercise their votes through electronic voting facility in association with Central Depository Service Limited (CDSL ). Members holding shares as on cut off date of 14th September 2023 may cast their vote electronically.

Members are informed that:

(a) The despatch of Notice of AGM to all the Members to their email address registered with the Company/Depository Participant completed.

(b) Voting through electronic mode shall commence on 18.09.2023 at 9.00 a.m and will ends on 20.09.2023 at 5.00 p.m.

(c) Voting through electronic mode shall not be allowed beyond 5.00 pm on 20th September 2023.

(d) A copy of notice is available on the website of the Company at www.gemspin.com and also on the website of CDSL at www.evotingindia.com.

(e) Members may refer the instruction on e-voting contained in the Notice or refer the Frequently asked questions (FAQ) and user manual on the e-voting website of CDSL for clarification in regard to electronic voting.

(f) In case of any queries regarding the process and manner of electronic voting, members may refer to CDSL through email at helpdesk.evoting@cdslindia.com or to the share transfer agent of the Company at M/s. Cameo Corporate Services Limited, No.1,Subramnain Building, Club House Road, Mount Road, Chennai 600 002. Email: kandhimathi@cameoindia.com.

(g) Any person who acquire shares of the Company becomes a member of the Company after the dispatch of the Notice of the AGM and holds shares as on the cut-off date i.e.14th September 2023 may obtain the login ID and password by sending a request at investor@cameoindia.com or helpdesk.evoting@cdslindia.com . However if a person is already registered with CDSL for e-voting, then the existing user ID and password can be used for casting vote;

(h) Any member who has voted through e-voting facility provided by the Company may participate in the general meeting in person or proxy but such a person will not be able to exercise his vote again in the meeting and the earlier vote casted through electronic means will be treated as final.

(i) The results of e-voting will be announced by the Company on its website and also to the stock exchange.

By order of the Board
For GEM SPINNERS INDIA LIMITED
Sd/-
R.VEERAMANI
MANAGING DIRECTOR

Place : Chennai
Date : 30.08.2023



**மான்சி பைனான்ஸ் (சென்னை) லிமிடெட்**
பதிவு அலுவலகம்: புதிய எண்.45, பழைய எண்.22, முல்லா சாகிப் தெரு, சவுகார்பேட்டை, சென்னை – 600 079

**29வது வருடாந்திர பொதுக்கூட்டம், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் புத்தகம் மூடல் அறிவிப்பு**

கம்பெனி உறுப்பினர்களின் 29வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) சனிக்கிழமை, 23 செப்டம்பர் 2023 அன்று காலை 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொளி காட்சி (VC)/பிற ஒளி ஒலி சாதனங்கள் (OAVM) மூலமாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ('எம்சிஏ') டிசம்பர் 28, 2022 தேதியிட்ட அதன் சுற்றறிக்கை மற்றும் இது தொடர்பான முந்தைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க (ஒட்டுமொத்தமாக "பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படுகிறது) VC/OAVM மூலம் 2023 ஆம் ஆண்டு வருடாந்திர பொதுக்கூட்டத்தை கூட்ட அனுமதித்துள்ளது. அதன்படி, நிறுவனத்தின் 29வது வருடாந்திர பொதுக்கூட்டம் VC/OAVM மூலம் கூட்டப்படும் மற்றும் பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") விதிகளுக்கு இணங்க மின்னணு முறையில் வாக்களிப்பதன் மூலம் அலுவல்களை பரிவர்த்தனை செய்யலாம். கட்ஆப் தேதி அதாவது ஞாயிற்றுக்கிழமை, செப்டம்பர் 17, 2023 அன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பதவாகி உள்ள ஒரு நபர், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிக்க தகுதியுடையவர் ஆவார். மின்னணு வழிமுறைகள் மூலம் அதாவது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் தேதியில் வாக்களிக்கும் வசதிக்காக, சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டடை (CDSL) நிறுவனம் ஈடுபடுத்தியுள்ளது.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 91, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 10 மற்றும் செக்யூரிடீஸ் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 42ன்படி, 29வது வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனியின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் ஞாயிற்றுக்கிழமை, செப்டம்பர் 17, 2023 முதல் சனிக்கிழமை, செப்டம்பர் 23, 2023 முடிய (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்.

பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள், ஜனவரி 5, 2023 தேதியிட்ட செபி சுற்றறிக்கை மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20 மற்றும் செபி எல்ஓடிஆர்–ன்படி, 2022–23 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கை மற்றும் 29வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மின்னணு முறையில் நிறுவனம்/பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர்களிடம் அல்லது வைப்புத்தொகை பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்படுகிறது. மேலே உள்ள ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளத்திலும், பங்குச் சந்தையின் இணையதளத்திலும் அதாவது https://www.cse-india.com/–ல் கிடைக்கும். உறுப்பினர்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பதாவது:

(a) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு புதன்கிழமை, செப்டம்பர் 20, 2023 அன்று (இந்திய நேரப்படி காலை 9.00 மணி) தொடங்கி வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 22, 2023 (இந்திய நேரப்படி மாலை 5.00 மணி) முடிவடையும். குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு மேல் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது;

(b) மின்னஞ்சல் அனுப்பி முடிவடைந்த தேதி அதாவது வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 1, 2023க்கு பிறகு பங்குகளை பெற்று நிறுவனத்தின் உறுப்பினரான ஒருவர் மற்றும் கட்ஆப் தேதி அதாவது ஞாயிற்றுக்கிழமை, செப்டம்பர் 17, 2023 அன்று பங்குகளை வைத்திருப்பவர் சிடிஎஸ்எல் மின்வாக்களிப்பு முறை மூலம் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகத்தில் மின்னணு முறையில் வாக்களிக்கலாம்;

(c) வருடாந்திர பொதுக்கூட்டத்துக்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்/பங்கேற்கலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள்;

(d) உறுப்பினர்கள் சிடிஎஸ்எல் மின்வாக்களிப்பு முறையை அணுக பங்குதாரர்கள்/உறுப்பினர்கள் உள்நுழைவின் கீழ் உள்ள இணைப்பில் https://www.evotingindia.comல் அணுகலாம். கூட்ட நாளில் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேர்வதற்கும் அதே இணைப்பு செல்லுபடியாகும். தொலைதூர மின்வாக்களிப்பு செயல்முறை, வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேருதல் மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்வாக்களிப்பு ஆகியவற்றிற்கான விரிவான வழிமுறைகள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன;

(e) மின்வாக்களிப்புக்கான உள்நுழைவுச் சான்றுகளைப் பெறுவதற்காக டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்படாத உறுப்பினர்கள், நிறுவனத்தின் மின்னஞ்சல் ஐடி mansi@mansiindia.com அல்லது ஆர்டிஏ மின்னஞ்சல் ஐடி mcsstaahmd@gmail.comக்கு அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளபடி தேவையான விவரங்கள் மற்றும் ஆவணங்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(f) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிப்பு நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடைபெறுவதை ஆய்வு செய்வதற்காக திரு. ஜகதீஷ் பிரசாத் முந்தாரா, பயிற்சி நிறுவன செயலர் (ICSI உறுப்பினர் எண். FCS 2353), உரிமையாளர், M/s. முந்தாரா & கோ, நிறுவனச் செயலர்கள், ஆராய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்வாக்களிப்பு / மின்வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் வினவல்/ தெளிவுபடுத்தல் அல்லது சிக்கல்களுக்கு, அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் உதவிப் பிரிவின் கீழ் www.evotingindia.com ல் கிடைக்கும் மின் வாக்களிப்பு கையேட்டை பார்வையிடலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் எழுதலாம் அல்லது கட்டணமில்லா எண். 1800 22 55 33 ல் திரு. ராகேஷ் தல்வியை (முதுநிலை மேலாளர்) தொடர்பு கொள்ளலாம்.

**குழுவின் ஆணைப்படி**
**மான்சி பைனான்ஸ் (சென்னை) லிமிடெட்டிற்காக**
**(சுரேஷ் பாப்னா)**
தலைவர் & நிர்வாக இயக்குனர்
DIN : 00007655

இடம்: சென்னை
தேதி : 30.08.2023



**தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: ‘ராமமந்திரம்’, ராஜபாளையம் 626 117.
கார்ப்பரேட் அலுவலகம்: "ஆராஸ் கார்ப்பரேட் மையம்", 5வது தளம், எண். 98–ஏ, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, சென்னை–600 004.
Ph.: 044-28478666; E-Mail: investorrelations@ramcocements.co.in
CIN : L26941TN1957PLC003566; Website : www.ramcocements.in

**தபால் ஓட்டு அறிவிப்பு**

**[நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 110, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014–ன் விதி 22 மற்றும் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015–ன் ஒழுங்குமுறை 44–ன் கீழ்]**

அன்பார்ந்த உறுப்பினர்களே,

திருத்தப்பட்ட நிறுவனங்கள் சட்டம், 2013–ன் (‘‘சட்டம்’’)பிரிவு 110–ன் விதிகள் மற்றும் பொருந்தக்கூடிய பிற விதிகள் ஏதேனும் இருந்தால் அவை உட்பட மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014, ("விதிகள்") விதிகள் 20 மற்றும் 22, திருத்தப்பட்டது மற்றும் டிசம்பர் 28, 2022 தேதியிட்ட கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (“எம்சிஏ”) வெளியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 11/2022, இது தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் தொடர்ச்சியாக (“எம்சிஏ சுற்றறிக்கைகள்”), இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செக்ரட்டரிஸ் ஆப் இந்தியா வெளியிட்ட பொதுக் கூட்டங்களில் செயலக தரநிலைகள் 2 மற்றும் செபியின் பொருந்தக்கூடிய விதிகள் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிமுறைகள், 2015 ("LODR") மற்றும் பொருந்தக்கூடிய பிற சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் உறுப்பினர்களின் ஒப்புதல் (கட்ஆப் தேதி, அதாவது வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 25, 2023) ("உறுப்பினர்கள்" அல்லது "ஈக்விட்டி பங்குதாரர்கள்") ஒரு சிறப்புத் தீர்மானத்தின் மூலம், மின்னஞ்சலில் தபால் வாக்கு மூலம் பெறப்படுகிறது. 30 ஆகஸ்ட் 2023 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வணிகத்தை பரிவர்த்தனை செய்ய வாக்களிக்க மட்டுமே:

| வ. எண் | அறிவிப்பின் நிகழ்ச்சி நிரல் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | திரு. எம்.பி.என். ராவ் (DIN : 00287260) அவர்களை இயக்குனராக 75 வயதுக்கு மேல் அவரது தற்போதைய பதவிக்காலத்தில் தொடர்ந்து செயல்பட செயல் அல்லாத சுயாதீன இயக்குனராக ஒப்புதல் அளித்தல் | சிறப்பு தீர்மானம் |

நிறுவனம் உறுப்பினர்களுக்கு மின்னணு–வாக்களிக்கும் வசதியை வழங்குவதற்காக சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டை (CDSL) சேவையில் ஈடுபடுத்தி உள்ளது. வாக்களிப்பதற்கான நடைமுறையின் விவரங்கள் அறிவிப்பின் 'குறிப்புகள்' பகுதியில் வழங்கப்பட்டுள்ளது.

தபால் வாக்குப்பதிவு மின்னணு வாக்குப்பதிவு வசதி பின்வரும் காலகட்டத்தில் கிடைக்கும்:

| | |
|---|---|
| மின்னணு–வாக்குப் பதிவு துவக்கம் | செப்டம்பர் 1, 2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 09.00 மணி (இந்திய நேரப்படி) |
| மின்னணு–வாக்குப் பதிவு முடிவு | 30 செப்டம்பர் 2023, சனிக்கிழமை மாலை 05.00 (இந்திய நேரப்படி) |

செப்டம்பர் 30, 2023 சனிக்கிழமை மாலை 05.00 மணிக்கு மேல் தொலைதூர மின்னணு–வாக்களிப்பு அனுமதிக்கப்படாது.

தங்களின் மின்னஞ்சல் முகவரியைப் புதுப்பிக்காத உறுப்பினர்கள், மின்னணு வடிவில் பங்குகளை வைத்திருப்பவர்கள் தங்களின் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மற்றும் காகித வடிவில் பங்குகளை வைத்திருப்பவர்கள் நிறுவனத்திடம் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிறுவனம்/டெபாசிட்டரிகளில் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாததால், இந்த அறிவிப்பைப் பெறாத உறுப்பினர்கள், இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாக மின்னணு–வாக்களிக்க உரிமை உண்டு.

நிறுவனத்தின் இணையதளமான www.ramcocements.in, பங்குச் சந்தைகள், அதாவது பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் ஆகிய இணையதளங்களில் www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றிலும் மற்றும் CDSL–ன் இணையதளம் www.evotingindia.com–லும் இந்த அறிவிப்பு கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவும்.

இந்த தபால் வாக்கெடுப்பின் முடிவுகள், ஆய்வாளர் அறிக்கையுடன், சட்டப்பூர்வ காலக்கெடுவுக்குள் பங்குச் சந்தைகள் மற்றும் CDSL ஆகியவற்றில் தாக்கல் செய்யப்படும், மேலும் நிறுவனத்தின் இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்படும்.

மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியுடன் தொடர்புடைய அனைத்து குறைகளையும் நிவர்த்தி செய்ய திரு.ராகேஷ் தல்வி, முதுநிலை மேலாளர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது தளம், மராத்தான் ஃப்யூச்சர்க்ஸ், மஃபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், என்.எம். ஜோஷி மார்க், லோயர். பரேல் (கிழக்கு), மும்பை 400013 அவர்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com–க்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது 1800 22 55 33 என்ற கட்டணமில்லா எண்ணை அழைக்கவும்.

**தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்,**
**கே.செல்வநாயகம்,**
**செயலாளர்**

**இடம்: சென்னை**
**நாள்: 30.08.2023**